IslamHouse.com

مركز أصول
Osoul Center
www.osoulcenter.com

Rabwah

Tamil
தமிழ்
تاميلي

# ஒரே ஆட்சியாளனிடம் புகலிடம் கோரல் அவசியம் என்பதற்கான சான்றுகள்

ஆக்கம்
அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் அஸ்ஸஃத்

தமிழில்
எம். அஹ்மத் (அப்பாஸி)

மீள்பரிசீலனை
எம். ஜே. எம் ரிஸ்மி (அப்பாஸி)

# البرهان
## في وجوب اللجوء إلى الواحد الديان


تأليف

عبد الله بن عبد الرحمن السعد

ترجمة

أبو عبد الرحمن أحمد بن محمد

مراجعة

أبو عبد الله محمد رزمي جنيد



Tamil

தமிழ்

تاميلي

OsoulCenter
www.osoulcenter.com

உஸூல் நிறுவனம்

இந்நூலின் மூலப்பிரதி உஸூல் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்டதாகும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்துப் படங்களினதும் உரிமை இந்நிறுவனத்தையே சாரும். இதில் எவ்வித மாற்றங்களும் செய்யாமலும், வெளியீட்டாளரின் பெயரைக் (உஸூல் நிறுவனம்) குறிப்படும் நிபந்தனையுடனும் இதனை அச்சிட்டு வெளியிட எமது நிறுவனம் அனைத்து முஸ்லிம்களுக்கும் அனுமதியளிக்கின்றது. அச்சிடும் போது இந்நிறுவனத்தின் அச்சுத் தரங்களைக் கடைபிடிக்குமாறும் நிறுவனம் வேண்டிக் கொள்கின்றது.

+966 504 442 532

+966 11 445 4900

+966 11 497 0126

P.O.BOX 29465 Riyadh 11457

osoul@rabwah.com

www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும்
நிகரற்ற அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் பெயரால்...

# அளவற்ற அருளாலனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரைக்கொண்டு ஆரம்பிக்கின்றேன்

சர்வ புகழும் அல்லாஹ்வுக்கே சொந்தம். அவனை நாம் போற்றுகிறோம். அவனிடமே உதவியும் தேடுகிறோம். எமது உள்ளம், செயல்கள் போன்றவற்றினால் ஏற்படும் கெடுதிகள் யாவற்றிலிருந்தும் அவனிடமே பாதுகாவல் தேடுகிறோம். அவன் யாருக்கு நேர்வழி காட்டினானோ அவனை வழிகெடுப்பவன் யாருமில்லை, யாரை வழிகெடுத்தானோ அவனுக்கு நேர்வழி காட்டு வோர் யாருமில்லை. உண்மையாக வணங்கப்படத் தகுதியான இறைவன் அவனைத் தவிர யாருமில்லை என சான்று பகர்கின்றேன். அவன் தனித்தவன். அவனுக்கு இணை எதுவும் கிடையாது. மேலும் நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியா ரும், தூதருமாவார்கள் என்றும் சான்று பகர்கின்றேன். அல்லாஹ் அன்னார் மீதும் அன்னாரது கிளையார்கள், தோழர்கள், மற்றும் இறுதிநாள் வரை அவரைப் பின் தொடர்வோர் அனைவர் மீதும் சாந்தியையும் சமாதா னத்தையும் அருள்வானாக.

தேவை நிவர்த்தித்தல், துன்பங்களைப் போக்குதல், துயர் துடைத்தல், நோயைக் குணப்படுத்தல், குழந்தைப் பாக்கியம் போன்றவற்றில் அல்லாஹ் மாத்திரம் ஆற்றல் பெற்றுள்ள

விடயங்களில் அவனல்லாதோரையும் அழைக்கும் வழமை இன்று முஸ்லிம் சமூகத்தில் பரவலாக மலிந்திருக்கின்றது. இஸ்லாத்தில் இது முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாறாக இது அறியாமைக் கால மார்க்கமாகவும் அல்லாஹ்வுக்கு இணைவைப்பதாகவும் உள்ளது.

இது தவறென்பதை 10 ஆதாரங்கள் மூலம் தெளிவு படுத்துகிறோம்.

1

# தன்னல்லாதோரை அழைத்துப்பிரார்த்திப்பதை அல்லாஹ் தடுத்துள்ளான்

அவன் தனது நபிக்கு பின்வருமாறு கூறுகின்றான்: *அல்லாஹ்வையன்றி உமக்கு பயனும், தீங்கும் தராத வற்றை பிரார்த்திக்காதீர்! (அவ்வாறு) செய்தால் நீர் அநீதி இழைத்தவராவீர்! (யூனுஸ் 106).*

மேலும் கூறுகின்றான்: *கியாமத் நாள்வரை தமக்குப் பதில் தராத, அல்லாஹ் அல்லாதோரை அழைப்பவரை விட மிகவும் வழிகெட்டவர் யார்? அவர்களோ தம்மை அழைப்பது பற்றி அறியாதுள்ளனர். மக்கள் ஒன்று திரட்டப்படும்போது அவர்கள் இவர்களுக்குப் பகை வர்களாக ஆவார்கள். இவர்கள் தம்மை வணங்கியதையும் மறுப்பார்கள். (அஹ்காஃப் 5 , 6).*

மேலும் கூறுகின்றான்: *நிச்சயமாக மஸ்ஜித்கள் அல்லாஹ்வுக்குரியனவே. எனவே (அதில்) அல்லாஹ்வு டன் சேர்த்து வேறு யாரையும் அழைத்திடாதீர். (ஜின் 18).* இது சம்பந்தமாக இன்னும் பல வசனங்கள் அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ளன.

2

# அல்லாஹ் அவனை மாத்திரமே அழைத்துப் பிரார்த்திக்குமாறு ஏவியுள்ளான்

அவன் பின்வருமாறு கூறுகின்றான்:

*“என்னை அழையுங்கள்! உங்களுக்குப் பதிலளிக்கிறேன்; எனது வணக்கத்தை விட்டும் பெருமையடிப்போர் நரகத்தில் இழிந்தோராக நுழைவார்கள்” என்று உங்கள் இறைவன் கூறுகிறான். (காபிர் 60).*

மேலும் கூறுகின்றான்: *என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் “நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும் போது பிரார்த்தனைக்குப் பதிலளிக்கிறேன். எனவே என்னிடமே பிரார்த்தனை செய்யட்டும்! என்னையே நம்பட்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்” (என்பதைக் கூறுவீராக!) (பகரா 186).*

மேலும் கூறுகின்றான்: *(நீங்கள் இணைகற்பித்தவை சிறந்தவையா? அல்லது) நெருக்கடியைச் சந்திப்பவன் பிரார்த்திக்கும்போது அதற்குப் பதிலளித்து துன்பத்தைப் போக்கி உங்களைப் பூமியில் வழித்தோன்றல்களாக ஆக்கியவனா? அல்லாஹ்வுடன் வேறு கடவுளா? குறைவாகவே சிந்திக்கிறீர்கள்! (நம்ல் 62).* அதாவது, அக்கருமத்தைச் செய்ய அவனுடன் சேர்த்து வேறுயாரும்

சக்தி பெறுவார்களா? அதற்கான விடை 'இல்லை'' என்றே கூறுவோம். மாறாக, அவன் மாத்திரம் தனியாகவே அதனைச் செய்வான்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "எனது இறைவன் நீதியைக் கட்டளையிட்டுள்ளான்" எனக்கூறுவீராக! ஒவ்வொரு தொழுமிடத்திலும் உங்களின் கவனங்களை ஒருமுகப்படுத்திக் கொள்ளுங்கள்! வணக்கத்தை அவனுக்கே உளத்தூய்மையுடன் செய்து, அவனிடமே பிரார்த்தியுங்கள்! உங்களை அவன் முதலில் படைத்தவாறே மீள்வீர்கள்! (அஃராப் 29).

மேலும் கூறுகின்றான்: அவனே (என்றும்) உயிருடன் இருப்பவன். அவனைத் தவிர வணக்கத்திற் குரியவன் யாருமில்லை. எனவே வணக்கத்தைத் தூய எண்ணத்துடன் அவனுக்கே உரித்தாக்கி அவனையே அழையுங்கள்! அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ் வுக்கே புகழனைத்தும். (காபிர் 65).

மேலும் கூறுகின்றான்: உங்கள் இறைவனைப் பணிவுடனும், இரகசியமாகவும் பிரார்த்தனை செய்யுங் கள்! வரம்பு மீறியோரை அவன் நேசிக்க மாட்டான். பூமியில் சீர்திருத்தம் செய்யப்பட்ட பின் அதைச் சீர் கெடுக்காதீர்கள்! அச்சத்துடனும், நம்பிக்கையுடனும் அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்! அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது. (அஃராப் 55, 56).

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு நாள் நான் நபி (ஸல்) அவர்களுடன் வாகனத்தில்

பின்னால் இருந்தேன். அப்போது பின்வருமாறு என்னிடம் கூறினார்கள். சிறுவனே ! உனக்கு சில வார்த்தைகளை கற்றுத் தருகிறேன். நீ அல்லாஹ்வை மனதில் கொள், அல்லாஹ் உன்னை காப்பாற்றுவான். அல்லாஹ்வை மனதில் கொள். அவனை உனக்கு முன்னால் காண்பாய். நீ கேட்டால் அல்லாஹ்விடம் கேள். உதவி தேடினால் அல்லாஹ்விடம் உதவி தேடு. உனக்கு ஒரு நன்மையை செய்யவேண்டும் என்று சமூகம் ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு விதித்ததை தவிர எந்த நன்மையையும் அவர்களால் உனக்கு செய்ய முடியாது. உனக்கு ஒரு தீமையை செய்யவேண்டும் என்று சமூகம் ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கு விதித்ததை தவிர எந்த தீமையையும் அவர்களால் உனக்கு செய்ய முடியாது. எழுது கோல்கள் உயர்த்தப்பட்டு ஏடுகள் காய்ந்து விட்டன.

*நூல்: திர்மிதீ 2685, அஹ்மத் 2669.* இதன் அறிவிப் பாளர் தொடர் சிறந்தது. இதன் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் கைஸ் பின் ஹஜ்ஜாஜ், ஹனஷ் அஸ்ஸன்ஆனீ ஆகிய இருவரும் நினைவாற்றல் சற்று குன்றிய ஸதூக் எனும் தரத்திலுள்ளவர்கள். அவர்களின் அறிவிப்புக்கள் ஹஸன் எனும் தரத்தில் ஏற்கப்படும். இச்செய்தியினை வலுப்படுத்தும் இன்னும் பல அறிவிப்பாளர் வரிசைகள் இதற்குண்டு. இமாம் திர்மீதீ அவர்கள் இதனை ஹஸன் ஸஹீஹ் எனும் தரத் திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

3

# அல்லாஹ் அல்லாதோரை அழைத்தவன் இறை மறுப்பிலும் இணைவைப்பிலும் விழுந்து விட்டதாக அல்லாஹ் தனது திருமறையில் தெளிவு படுத்தியுள்ளான்

அல்லாஹ்வுடன் வேறு கடவுளை யாரேனும் அழைத்தால் அவனிடம் அது குறித்து எந்தச் சான்றும் இல்லை. அவனை விசாரிப்பது அவனது இறைவனிடமே உள்ளது. (ஏகஇறைவனை) மறுப்போர் வெற்றி பெற மாட்டார்கள். (முஃமினூன் 117). எனவே இவ்வசனத்திற் கமைய யார் அவ்வாறு அழைக்கின்றாரோ அவர் காபிராகி விடுகின்றார்.

மேலும் கூறுகின்றான்: கியாமத் நாள் வரை தமக்குப் பதில் தராத, அல்லாஹ் அல்லாதோரை அழைப்பவரை விட மிகவும் வழிகெட்டவர் யார்? அவர்களோ தம்மை அழைப்பது பற்றி அறியாது உள்ளனர். மக்கள் ஒன்று திரட்டப்படும் போது அவர்கள் இவர்களுக்குப் பகைவர்களாக ஆவார்கள். இவர்கள் தம்மை வணங்கியதையும் மறுப்பார்கள். (அஹ்காஃப் 5,6). அல்லாஹ்வன்றி வேறொருவரை அழைக்கும் இச்செயலைச் செய்தவனை விட வழிகேடன் யாருமில்லை என்பதை விளக்கியுள்ளான்.

மேலும் கூறுகின்றான்: ‘நான் எனது இறைவனையே பிரார்த்திக்கிறேன். அவனுக்கு யாரையும் இணையாக்க

*மாட்டேன்'' என (முஹம்மதே!) கூறுவீராக! (ஜின் 20). அதாவது பிரார்த்தனையில் அவனையன்றி படைப்பினங்களை அழைத்து அவனுக்கு இணைவைக்க மாட்டேன்.*

4

# படைப்பினங்கள் அல்லாஹ்விடத்தில் எவ்வளவு உயர்ந்த இடத்திலிருந்தாலும் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய ஆற்றலை வைத்துத்தவிர எதனையும் அவர்களால் செய்ய முடியாது

அவர்கள் அவனின்பால் தேவையுள்ளவர்கள். அவர்களும் பிறரைப் போல் மனிதர்கள்தான். மனிதர்களுக்கு ஏற்படும் இடர்கள் அனைத்தும் இவர்களுக்கும் ஏற்படும். அவர்கள் உண்ணுவார்கள், பருகுவார்கள், நோய்வாய்ப் படுவார்கள், மரணிப்பார்கள். அல்லாஹ் கூறுகின்றான்: மனிதர்களே! நீங்கள் அல்லாஹ்விடம் தேவையுடையவர்கள். அல்லாஹ்வோ தேவைகளற்றவன் புகழுக்குரியவன். (பாதிர் 15).

மூஸா (அலை) அவர்கள் கூறியதைப் பின்வருமாறு கூறுகின்றான்: "என் இறைவா! எனக்கு நீ வழங்கும் நன்மையில் தேவையுள்ளவனாக இருக்கிறேன்" என்றார். (கஸஸ் 24).

இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி: நான் நோயுறும்போது அவனே எனக்கு நிவாரணம் தருகிறான். (ஷுஅரா 80) என்று கூறுகின்றான்.

ஈஸா (அலை), அவர்களது தாயார் மர்யம் (அலை) ஆகியோரும் உண்ணக்கூடியவர்களாக இருந்தார்கள் என்று கூறுகின்றான். மர்யமின் மகன் மஸீஹ் தூதரைத் தவிர

வேறில்லை. அவருக்கு முன் பல தூதர்கள் சென்று விட்டனர். அவரது தாய் உண்மையாளர். அவ்விருவரும் உணவு உண்போராக இருந்தனர். இவர்களுக்குச் சான்றுகளை எவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளோம் என்பதைச் சிந்திப்பீராக! பின்னர் எவ்வாறு திசை திருப்பப்படுகின்றனர் என்பதையும் சிந்திப்பீராக! (மாஇதா 75).

மேலும் கூறுகின்றான்: "மர்யமின் மகன் மஸீஹையும், அவரது தாயாரையும், பூமியில் உள்ள அனைவரையும் அல்லாஹ் அழிக்க நாடினால் அவனிடமிருந்து (அதைத் தடுக்க) சிறிதளவேனும் சக்தி பெற்றவர் யார்?" என்று நீர் கேட்பீராக! (மாஇதா 17).

மேலும் கூறுகின்றான்: (முஹம்மதே!) உமக்கு முன் நாம் அனுப்பிய தூதர்களை உணவு உண்போராகவும், கடை வீதிகளில் நடமாடுவோராகவுமே அனுப்பினோம். (புஃர்கான் 20).

தனது நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி: (முஹம்மதே!) நீர் மரணிப்பவரே. அவர்களும் மரணிப் போரே. (ஸுமர் 30) என்று கூறுகின்றான்.

மேலும் கூறுகின்றான்: (நபியே) எந்த விடயத்தை யும் நிச்சயமாக நான் நாளை செய்வேன் என்று நீர் கூற வேண்டாம். அல்லாஹ் நாடினாலே தவிர என்று கூறுங்கள். நீர் மறந்து விட்டால் (ஞாபகம் வந்ததும்) உமது இரட்சகனை நினைவு கூறுவீராக. இன்னும் இதை விட நேர்வழிக்கு மிக நெருக்கமானவற்றின் பால் எனக்கு வழி காட்டுவான். எனவும் கூறுவீராக. (கஹ்ஃப் 23, 24).

மேலும் கூறுகின்றான்: "நான் உங்களைப் போன்ற மனிதன்தான். (எனினும்) உங்கள் கடவுள் ஒரே ஒரு கடவுளே என எனக்கு அறிவிக்கப்படுகிறது. தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்லறத்தைச் செய்யட்டும்! தமது இறைவணக்கத்தில் எவரையும் இணைகற்பிக்காது இருக்கட்டும்'' என்று (முஹம்மதே!) கூறுவீராக! (கஹ்ஃப் 110).

மாறாக சில நபிமார்களை அவர்களது சமூகம் கொன்றதாகவும் கூறுகின்றான். "நீங்கள் விரும்பாததைத் தூதர்கள் கொண்டு வந்த போதெல்லாம் அகந்தை கொண்டீர்கள். சிலரைப் பொய்யரென்றீர்கள். சிலரைக் கொன்றீர்கள்''. (பகரா 87).

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து நாம் எட்டும் முடிவு: பிரார்த்தனை என்பது அல்லாஹ்விடம் மாத்திரம்தான் கேட்கப் படவேண்டும். ஏனெனில் அவன்தான் அனைத் தின் மீதும் ஆற்றலுள்ள படைத்துப் பரிபாலிப்பவன். படைப்பினங்கள் எவருடைய துணையுமின்றித் தனியா கக்காரியங்களை ஆற்றக் கூடியவன். அல்லாஹ் கூறு கின்றான்: அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக் கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவர்களை அழைத்துப் பாருங்கள்! அவர்கள் உங்களுக்குப் பதில் தரட்டும்! (அஃராப் 194).

மேலும் கூறுகின்றான்: மனிதர்களே! உங்களுக்கு ஓர் உதாரணம் கூறப்படுகிறது. அதைக்கவனமாகக் கேளுங்கள்!

அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டாலும் ஓர் ஈயைக்கூட படைக்க முடியாது. ஈ அவர்களிடமிருந்து எதையேனும் பறித்துக் கொண்டால் அதை அந்த ஈயிடமிருந்து அவர்களால் மீட்கவும் முடியாது. தேடு வோனும், தேடப்படுவோனும் பலவீனமாக இருக்கிறார் கள். *(ஹஜ் 73).*

மேலும் கூறுகின்றான்: *“எங்கள் இறைவா! எங்களை விட்டும் நரகத்தின் வேதனையைத் தடுப்பாயாக! அதன் வேதனை நிலையானதாக இருக்கிறது’’* என்று அவர்கள் கூறுகின்றனர். *(புஃர்கான் 65).*

5

# நபிமார்கள், இறைத்தூதர்கள், நல்லடியார்கள், ஏன் வானவர்கள் உட்பட அனைவரும் தமது அனைத்துக் கருமங்களிலும், பலதரப்பட்ட நிலைகளிலும் அல்லாஹ்வையன்றி யாரையும் அழைக்கமாட்டார்கள் என அவன் கூறுகின்றான்

*இவ்விடயத்தில் அவர்களை முன்மாதிரியாக எடுத்துப் பின்பற்றுதல் அவசியமாகும்.*

*தனது நபி யூனுஸ் (அலை) மீனின் வயிற்றிலிருந்த செய்தியைப் பின்வருமாறு கூறுகின்றான்: மீனுடையவர் (யூனுஸ்) கோபித்துக் கொண்டு சென்றார். "அவர் மீது நாம் சக்தி பெற மாட்டோம்'' என்று நினைத்தார். "உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை. நீ தூயவன். நான் அநீதி இழைத்தோரில் ஆகி விட்டேன்'' என்று இருள்களிலிருந்து அவர் அழைத்தார். (அன்பியாஃ 87).*

*ஸகரிய்யா (அலை) அவர்களைப் பற்றி "என் இறைவா! என்னைத் தனியாளாக விட்டு விடாதே! நீ மிகச் சிறந்த உரிமையாளன்'' என்று ஸகரிய்யா தமது இறைவனை அழைத்த போது, அவருக்காக (அவரது பிரார்த்தனையை) ஏற்றோம். அவருக்கு யஹ்யாவை அன்பளிப்பாக அளித்தோம். அவரது மனைவியை அவருக்காக (குழந்தை பெறும்) தகுதி உடையவராக ஆக்கினோம். அவர்கள் நன்மைகளை நோக்கி*

விரைந்து செல்வோராகவும், ஆர்வத்துடனும் அச்சத்துடனும் நம்மிடம் பிரார்த்திப்போராகவும் இருந்தனர். நமக்குப் பணிவோராகவும் இருந்தனர். *(அன்பியாஃ 89, 90)* என்று கூறுகின்றான்.

அய்யூப் (அலை) பிரார்த்தித்ததைப் பின்வருமாறு கூறுகின்றான்: *"எனக்குத் துன்பம் நேர்ந்து விட்டது. நீ கருணையாளர்களுக்கெல்லாம் கருணையாளன்"* என அய்யூப் தமது இறைவனை அழைத்தபோது, அவரது பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டோம். அவருக்கு ஏற்பட்ட துன்பத்தை நீக்கினோம். அவரது குடும்பத்தாரையும், அவர்களுடன் அவர்களைப் போன்றோரையும் நம் அருளாக அவருக்கு வழங்கினோம். வணக்கசாலிகளுக்கு இது அறிவுரை. *(அன்பியாஃ 83, 84).*

வானவர்களைப்பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான்: அர்ஷைச் சுமப்போரும், அதைச் சுற்றியுள்ளோரும் தமது இறைவனைப் போற்றிப் புகழ்கின்றனர். அவனை நம்பு கின்றனர். *"எங்கள் இறைவா! ஒவ்வொரு பொருளையும் அருளாலும், அறிவாலும் நீ சூழ்ந்திருக்கிறாய். எனவே மன்னிப்புக்கேட்டு, உனது பாதையைப் பின்பற்றியோரை மன்னிப்பாயாக! அவர்களை நரகத்தின் வேதனையை விட்டும் காப்பாயாக!"* என்று நம்பிக்கை கொண்டோருக் காக பாவமன்னிப்புத்தேடுகின்றனர். *"எங்கள் இறைவா! அவர்களையும், அவர்களது பெற்றோர்களையும், வாழ்க் கைத்துணைகளையும், அவர்களது சந்ததிகளில் நல்லோ ரையும் நீ வாக்களித்த நிலையான சொர்க்கச்சோலைகளில் நுழையச் செய்வாயாக! நீ மிகைத்தவன்; ஞானமிக் கவன்."* *(காபிர் 7, 8).*

நபி (ஸல்) அவர்கள் பத்ருப்போரில் கேட்ட பிரார்த்தனையை இமாம் புஹாரி (ரஹ்) தனது நூலில் *(3953)* இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைத் தொட்டும் இக்ரிமாஃ (ரஹ்) வாயிலாகப் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்: *இறைவா! (மறுப்பாளர்களுக்கெதிராக எங்களுக்கு நீ வெற்றியளிப்பதாக நீ அளித்த) உன்னுடைய உறுதி மொழியையும், வாக்குறுதியையும் (நிறைவேற்றித் தருமம்படி) கோருகிறேன். (இறைவா! இந்த விசுவாசிகளை அழிக்க) நீ நினைத்தால், உன்னை(மட்டுமே) வழிபடு வோர்(இப்புவியில்) இல்லாமல் போய்விடுவர்'' என்று கூறினார்கள். அப்போது அபூ பக்ர்(ரலி) நபி (ஸல்) அவர்களின் கரத்தைப் பற்றிக் கொண்டு, 'போதும் (இறைத் தூதர் அவர்களே!)'' என்று கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் (தாம் தங்கியிருந்த கூடாரத்திலிருந்து)'' அந்தப் படையினர் தோற்கடிக்கப்படுவர். அவர்கள் புற முதுகிட்டு ஓடுவர்'' என்று (அல்கமர் 45-வது குர்ஆன் வசன வாசகத்தைக்) கூறிக் கொண்டே வெளியேறி வந்தார்கள்.*

ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) தனது புஹாரிக்கான விரிவுரை நூல் "பத்ஹுல் பாரீ"யில் *(9/20)* பின்வருமாறு கூறிகின்றார்கள்: இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்களது செய்தியொன்று ஹஸன் எனும் தரத்திலுள்ள அறிவிப் பாளர் தொடர் மூலம் தபரானியில் பதியப்பட்டுள்ளது. முஹம்மத் தனது இறைவனிடம் பத்ரு தினத்தன்று வேண்டிய கோரிக்கையைப் போன்று தொலைந்த பொருளை வேண்டிநிற்கும் யாரையும் நாம் கேள்விப்பட வில்லை. "இறைவா நீ எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் படி வேண்டுகிறேன்". *(அல் முஃஜமுல் கபீர் 10270).*

இதே சம்பவம் இமாம் நஸாஈ (ரஹ்) தொகுத்த "அஸ்ஸுனனுல் குப்ரா"வில் (10367) பின்வருமாறு இடம் பெற்றுள்ளது: இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகின் றார்கள்: பத்ர் யுத்த தினத்தில் சத்தித்துக் கொண்ட போது நபி (ஸல்) அவர்கள் எழுந்து சென்று (கூடாரத் தில்) தொழ ஆரம்பித்தார்கள். முஹம்மத் தனது இறைவனிடம் வேண்டியதைப் போன்று தனது உரிமையை வேண்டி நிற்கும் யாரையும் நான் காணவில்லை. அவர்கள் கூறினார்கள்: "இறைவா! (மறுப்பாளர்களுக்கு எதிராக எங்களுக்கு நீ வெற்றியளிப்பதாக அளித்த) உன்னுடைய உறுதி மொழியையும், வாக்குறுதியையும் (நிறைவேற்றித் தரும்படி) கோருகிறேன். இறைவா நீ எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் படி உன்னிடம் கேட்கிறேன். இறைவா! இச்சிறு கூட்டத்தை நீ தோற்கடித்து அழித்தால் உன்னை (மட்டுமே) வழிபடுவோர் இப்புவியில் இல்லாமல் போய்விடுவர்". பின்பு எங்கள் பக்கம் திரும்பினார்கள். அன்னாரது முகத்தின் பிரகாசம் நிலாவைப் போன்றிருந்தது. "இதுதான் இன்று மாலையில் அக்கூட்டத்துடைய புதைகுழிகள்" என்றார் கள். இச்செய்தியின் அறிவிப்பாளர் தொடர் பின்வருமாறு: முஹம்மத் பின் யஹ்யா பின் முஹம்மத் – உமர் பின் ஹப்ஃஸ் – ஹப்ஸ் பின் கியாஸ் – அல்அஃமஷ் – அபூ இஸ்ஹாக் – அபூ உபைதா – அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி).

தபரானியில் (10270, 10271) இதே செய்தி சிறு வித்தியாசங்களுடன் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது: முஹம்மத் தனது இறைவனிடம் பத்ரு தினத்தன்று

வேண்டிய கோரிக்கையைப் போன்று தொலைந்த பொருளை வேண்டி நிற்கும் யாரையும் நாம் கேள்விப்பட வில்லை. "இறைவா நீ எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் படி வேண்டுகிறேன். இறைவா! இச்சிறு கூட்டத்தை நீ தோற்கடித்து அழித்தால் உன்னை (மட்டுமே) வழிபடுவோர் (இப்புவியில்) இல்லாமல் போய் விடுவர்". பின்பு எங்கள் பக்கம் திரும்பினார்கள். அன்னாரது முகத்தின் பிரகாசம் நிலாவைப் போன்றிருந்தது. "மாலையில் அக்கூட்டத்துடைய புதைகுழிகளை நான் காண்பது போல் இருக்கின்றது" என்றார்கள். இச்செய்தியின் அறிவிப்பாளர் தொடர் பின்வருமாறு: அப்துல்லாஹ் பின் முஹம்மத் பின் அப்பாஸ் அல் அஸ்பஹானீ, அப்தான் பின் அஹ்மத், அலீ பின் பிஸ்தாம் அஸ்ஸஃபரானீ (ஆகிய மூவரும்) – ஸஹ்ல் பின் உஸ்மான் – யஹ்யா பின் ஸகரிய்யா பின் அபீ ஸாஇதாஃ – அல்அஃமஷ் – அபூ இஸ்ஹாக் – அபூ உபைதா – அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி).

## 6

# இப்பிரபஞ்சமும், அதிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வுக்குச்சொந்தமானதே

அவனுடைய கையில், அவனது நிர்வாகத்தில், அவனது செயற்பாட்டில்தான் அனைத்தும் உள்ளன. அப்படியிருக்கும் போது அவன் மாத்திரம்தான் அழைக்கப் படத் தகுதியானவன். ஏனெனில் ஆட்சி அவனுடையது. படைப்புக்கள் அவனுடையது. கட்டளை அவனுடையது.

அல்லாஹ் கூறுகின்றான்: அளவற்ற அருளாளன் அர்ஷின் மீது உயர்ந்தான். வானங்களில் உள்ளவையும், பூமியில் உள்ளவையும், அவ்விரண்டுக்கும் இடையே உள்ளவையும், பூமிக்கு அடியில் உள்ளவையும் அவனுக்கே உரியன. (தாஹா 5, 6).

மேலும் கூறுகின்றான்: பூமியில் நுழைவதையும், அதிலிருந்து வெளிப்படுவதையும், வானிலிருந்து இறங்கு வதையும், அதில் ஏறுவதையும் அவன் அறிவான். நீங்கள் எங்கே இருந்தாலும் அவன் உங்களுடன் இருக்கிறான். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் பார்ப்பவன். (ஹதீத் 4).

மேலும் கூறுகின்றான்: நீங்கள் அவர்களை அழைத் தால் உங்கள் அழைப்பை அவர்கள் செவியுறமாட்டார் கள். செவியேற்பார்கள் என்று வைத்துக் கொண்டாலும் உங்களுக்குப் பதில் தரமாட்டார்கள். கியாமத் நாளில்

நீங்கள் இணைகற்பித்ததை அவர்கள் மறுத்து விடுவார்கள். நன்கறிந்த (இறை)வனைப் போல் உமக்கு எவரும் அறிவிக்க முடியாது. *(பாதிர் 14).*

மேலும் கூறுகின்றான்: *அவன் தேவைகளற்றவன். (இஃலாஸ் 2).* இங்கு "ஸமத்" என்பதன் விளக்கம் படைப்பினங்கள் தேவைகளின்போது அவனைத்தான் நாடிச் செல்கின்றனர். அவனோ தேவைகளற்றவன்.

7

# நபிமார்கள், இறைத்தூதர்கள் தமது தேவைகளை அல்லாஹ்விடம் கேட்டபோது அவர்களுக்குப்பதிலளிக்கப்படாத, நோக்கம் நிறைவேறாத சந்தர்ப்பங்களும் சில உண்டெனஅவனே கூறுகின்றான்

தனது நபி முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றான்: *(முஹம்மதே!) நீர் விரும்பியோரை உம்மால் நேர்வழியில் செலுத்த முடியாது! மாறாக, தான் நாடியோருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகிறான். அவன் நேர்வழி பெற்றோரை நன்கறிந்தவன். (கஸஸ் 56).*

மேலும் கூறுகின்றான்: *(முஹம்மதே!) அவர்களுக்காக பாவமன்னிப்புக் கேளும்! அல்லது கேட்காமல் இரும்! அவர்களுக்காக நீர் எழுபது தடவை பாவமன்னிப்புக்கேட்டாலும் அவர்களை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான். (தௌபா 80).*

மேலும் கூறுகின்றான்: *இணை கற்பிப்போர் நரகவாசிகள் என்பது தெரிந்த பின்னர், அவர்கள் நெருங்கிய உறவினரேயானாலும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புத் தேடுவது நம்பிக்கை கொண்டோருக்கும், இந்த நபிக்கும் (முஹம்மதுக்கும்) தகாது. (தௌபா 113).*

இப்ராஹீம் (அலை) அவர்களைப் பற்றி: இப்ராஹீம் தம் தந்தைக்காகப் பாவமன்னிப்புத் தேடியது, தந்தைக்கு அவர் அளித்த வாக்குறுதியின் காரணமாகவே. அவர் அல்லாஹ்வின் எதிரி என்பது அவருக்குத் தெரிந்த பின் அதிலிருந்து விலகிக் கொண்டார். இப்ராஹீம் பணிவுள்ளவர்; சகிப்புத் தன்மை உள்ளவர். (தௌபா 114) என்று கூறுகின்றான். இவ்விடயத்தில் அல்லாஹ் இப்ராஹீம் (அலை) அவர்களது பிரார்த்தனையை ஏற்கவில்லை என்பது தெளிவாக அறியப்பட்ட விடயம்.

நூஹ் (அலை) அவர்களைப்பற்றி: நூஹ், தம் இறைவனை அழைத்தார். "என் மகன் என் குடும்பத்தைச் சேர்ந்தவன். உனது வாக்குறுதியும் உண்மையே. நீயே தீர்ப்பு வழங்குவோரில் மேலானவன்'' என்றார். "நூஹே! அவன் உன் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன். இது நல்ல செயலல்லல. உமக்கு அறிவு இல்லாதது பற்றி என்னிடம் கேட்காதீர்! அறியாதவராக நீர் இருக்கக் கூடாது என உமக்கு அறிவுரை கூறுகிறேன்'' என்று அவன் கூறினான். "இறைவா! எனக்கு அறிவு இல்லாதது பற்றி உன்னிடம் கேட்பதை விட்டும் உன்னிடமே நான் பாதுகாப்புத்தேடுகிறேன். நீ என்னை மன்னித்து அருள் புரியாவிட்டால் நட்டமடைந்தவனாகி விடுவேன்'' என்று அவர் கூறினார். (ஹூத் 45 - 47) என்று கூறுகின்றான்.

நிலமை இவ்வாறிருக்கும் போது அல்லாஹ்வன்றி அவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவார்கள்?.

மேலும், உஹதுப்போர் தினத்தன்று நடந்த நிகழ்வையும் இங்கு கவனிக்க வேண்டும். முஸ்லிம்கள் நபியவர்களின் தலைமையில் இணைவைப்பாளர்களுக்கு எதிராக வெற்றியீட்டும் நோக்கில்

போராடியபோது அதற் குரிய சகல முயற்சிகளையும் மேற்கொண்டும் வெற்றி கிட்டவில்லை. ஸூரா ஆல இம்ரானில் அது பற்றி பல வசனங்களை அல்லாஹ் அருளியுள்ளான். அவற்றில் முஸ்லிம்களுக்கு அத்தினம் ஏற்பட்ட தோல்வியைத் தழுவி பல வழிகாட்டல்களும் அறிவுரைகளும் உள்ளடங்கியுள்ளன.

ஸிப்ஃபீன் போரில் அலீ (ரலி) அவர்களுக்கு நிகழ்ந்த தையும் சற்று நோக்க வேண்டும். எதிர்த்தரப்புடன் மோதி வெற்றி பெறுவதற்காகப் பல முயற்சிகளை மேற் கொண்டும் அது கைகூடவில்லை.

ஹுஸைன் (ரலி) அவர்களையும் சற்று நோக்க வேண்டும். தன்னைக் காத்துக்கொள்வதற்காக கொலை செய்யப்படும் வரை போராடினார்கள். அவருடன் சேர்த்து குடும்பத்தவர்களும் கொல்லப்பட்டார்கள். தன்னையோ தனது குடும்பத்தினரையோ காத்துக் கொள்ள அவர்களால் முடியவில்லை.

அல்லாஹ்வன்றி அலீ (ரலி), ஹுஸைன் (ரலி) அவர்களை அழைத்துப் பிரார்த்திப்போர் எங்கே? அவர்கள் தமக்கும் தமது குடும்பத்திற்கும் வந்த ஆபத்தையே தன்னால் தடுக்க முடியவில்லை. அல்லாஹ் அவர்கள் விடயத்தில் எழுதியதை அவர்களால் மாற்ற முடியவில்லை. இது பகுத்தறிவின் மூலம் நிரூபணமாகிய விடயம். யாருக்கும் இதனைவிட்டு நகர முடியாது. மேலும் நேரடியாகப் பார்த்து அறிந்த விடயம். யாராலும் தட்டவும் முடியாது. துன்பங்கள் வரும்போது அலீ (ரலி), ஹுஸைன் (ரலி) அவர்களிருவரும் தமது இறைவனிடமே ஒதுங்கி, அவனிடமே பிரார்த்திக்கலானார்கள். அவர்களை நேசிப்பதாக வாதாடுவோரும் அவ்விருவரு டைய பாதையையே பின்பற்றிச் செல்ல வேண்டும்.

எந்தளவுக்கெனில், அல்லாஹ்வுடைய மாளிகையில் கஃபாவுக்கருகில் உட்கார்ந்துவிட்டு எழும்போது "யா அலீ!" (அலீயே எனக்கு உதவிபுரியுங்கள்) என்று அழைக்குமளவிற்கு சிலர் அளவுமீறிச் சென்றுவிட்டனர். அவரிடத்தில் மார்க்க அறிஞரொருவர் பின்வருமாறு வினவினார்: நீ பிறரொருவருடைய வீட்டிலிருந்து, உமக்கொரு தேவையேற்பட்டால் அவ்வீட்டாரிடம் கேட்பாயா? அயல் வீட்டாரிடம் சென்று கேட்பாயா? அதே வீட்டாரிடம் தான் கேட்பேன் என்பதாகத்தான் அவருடைய பதில் அமைந்திருந்தது. அவரால் அதனைத் தட்டமுடியவில்லை. மாறாக சத்தியத்தை ஏற்றுக் கொண்டுவிட்டார் என்பதை சற்று சிந்தியுங்கள். இதனால்தான் அல்லாஹ் கூறுகின்றான்: இவர்கள் யாரிடம் பிரார்த்திக்கிறார்களோ அவர்களில் (இறைவனுக்கு) மிகவும் நெருக்கமானவர்களே தமது இறைவனை நோக்கி வஸீலாவை (இறைவனை நெருங்குவதற்கான வழியைத்) தேடுகின்றனர். அவனது அருளை எதிர்பார்க்கின்றனர். அவனது வேதனைக்கு அஞ்சுகின்றனர். உமது இறைவனின் வேதனை அச்சப்பட வேண்டியதாகும். *(இஸ்ராஃ 57)*

அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய மற்றுமோர் உதாரணத்தைக் கூறுகின்றேன். பல சொத்துக்களும் குழந்தைகளுமுள்ள ஒரு செல்வந்தர் தனது குழந்தைகளுக்குத் தினமும்: உங்களுக்கு பணமோ, உணவோ, உடையோ தேவையென்றால் என்னிடமே கேளுங்கள் எனக் கூறிக்கொண்டே இருப்பாரென வைத்துக்கொள்வோம். ஆனால் அக்குழந்தைகளோ தனது தந்தையிடம் கேட்காமல் அயல் வீட்டாரிடம் சென்று கேட்கின்றனர்.

இவர்களது இச்செயல் அறிவுபூர்வமானது என்போமா? அல்லது அறிவீனம் என்போமா? இவ்வுதாரணம் படைப் புக்களுடன் சம்பந்தப்பட்டது. உயர்வான உதாரணங் களுக்குச் சொந்தக்காரனான படைத்தவனிடம் எப்படி இருக்கும்? எனவே தனது படைப்பாளனாகவும், தலைவ னாகவும், பொறுப்பாளனாகவுமுள்ள அல்லாஹ்விடமே அடியான் தனது தேவகளைக்கேட்கவும், துன்பங்களிலி ருந்து நிவாரணம் பெறவும் நாடிச் செல்ல வேண்டும்.

மூஸா (அலை) கற்பாறைக்கு அடிக்கும் போது தண்ணீர் பீரிட்டுப் பாயக்கூடியதாக இருந்தது. ஈஸா (அலை) மரணித்தோரை உயிர்ப்பிப்பார்கள். பிறவிக்குருடு, தொழுநோய் போன்றவற்றைக் குணப்படுத்துவார்கள். இது போன்ற நபிமார்களுக்கு வழங்கப்பட்ட சில அற்புதங்களை, அல்லாஹ்வன்றி அவர்களிடம் பிரார்த்திப்பதற்காக சிலர் ஆதாரமாகக்கொள்கின்றனர்.

## இதற்குப் பின்வருமாறு பதிலளிக்கின்றேன்:

1. இந்த அற்புதங்களெல்லாம் அல்லாஹ்வால் வழங்கப் பட்டவை. "இஸ்ராயீலின் மக்களுக்குத் தூதராகவும் (ஈஸாவை அனுப்பினான்.) "உங்கள் இறைவனிட மிருந்து சான்றை நான் கொண்டு வந்துள்ளேன். உங்களுக்காக களி மண்ணால் பறவையின் வடிவம் அமைத்து, அதில் ஊதுவேன்; அல்லாஹ்வின் அனுமதியின்படி அது பறவையாக ஆகும். அல்லாஹ் வின் அனுமதியின்படி பிறவிக் குருடையும், தொழு நோயையும் நீக்குவேன்; இறந்தோரை உயிர்ப்பிப்

பேன்;...” (ஆல இம்ரான் 49). இந்த அற்புதங்களை வழங்கிய அல்லாஹ்விடம் கேட்பதே அடியான் மீது கடமையாகும்.

**2.** முன்னர் கூறப்பட்ட வசனங்களைப் போன்று இந்த நபிமார்களும் அல்லாஹ்விடம்தான் கேட்பவர்களாக இருந்தார்கள். எனவே மனிதா! நீயும் அவர்களைத் தான் துயர வேண்டும். அவர்களிடம் கேட்காமல் அல்லாஹ்விடம் கேட்க வேண்டும். அவர்கள்தான் எமது முன்மாதிரி வழிகாட்டி.

**3.** முன்னர் கூறப்பட்ட ஆதாரங்களெல்லாம் அல்லாஹ் வன்றிப் பிறரிடத்தில் கேட்கக்கூடாதென்பதைத் தெளிவாக விளக்குகின்றது. மாறாக மனிதன் சக்தி பெறக்கூடிய விடயங்களில் கூட முதலில் அவனிட மிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். அபூ ஜஃபர் முஹம்மத் அல்பாகிர் (ரஹ்) கூறியதாக ஒரு செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. “படைப்பினங்கள் பால் யாருக்காவது ஒரு தேவையேற்பட்டால் முதலில் அல்லாஹ்விடம் கேட்டுவிட்டுப் பிற முயற்சிகளை மேற்கொள்ளட்டும்.” (அல்முஸ்தஃகீஸூன bபில்லாஹ் பக்கம் 68 – இப்னு புஷ்குவாலுக்குரியது).

8

# அல்லாஹ் தனது அடியார்களுக்கு அவனை மாத்திரம் அழைக்கும்படி ஏவி, அவனன்றி வேறு யாரையும் அழைக்கவேண்டாமென தடுத்தது போல், தன்னுடைய அடியார்கள் தன்னை அழைப்பதையும், தன்னிடம் கேட்பதையும், பாதுகாவல் தேடுவதையும், தமது அனைத்து காரியங்களிலும் அவனிடமே ஒதுங்குவதையும் விரும்புகின்றான்

பிரார்த்தனை என்பது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான வணக்கம். தன்னுடைய இறைவனை அழைப்பவன் அவனுக்கு விருப்பமான, அவன்பால் நெருக்கமாக்கி வைக்கும் ஒரு செயலைத்தான் செய்கின்றான். அல்லாஹ் கூறியதாக அறிவிக்கப்படும் ஒரு மகத்தான செய்தி இதற்கு ஆதாரமாகவுள்ளது. 'நம்முடைய இறைவன் ஒவ்வோர் இரவும் கீழ் வானத்திற்கு இறங்கி இரவில் மூன்றில் ஒரு பகுதி இருக்கும்போது, 'என்னிடம் யாரேனும் பிரார்த்தித்தால் அதை நான் அங்கீகரிக்கிறேன். யாரேனும் என்னிடம் கேட்டால் அவருக்கு கொடுக்கிறேன். யாரேனும் என்னிடம் பாவமன்னிப்புக் கோரினால் அவரை நான் மன்னிக்கிறேன்' என்று கூறுவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புஹாரி 1145, முஸ்லிம் 758).

அல்லாஹ்வின் இந்த தயாள குணத்தைப் பாருங்கள்.

ஒவ்வோர் இரவும் தன்னுடைய அடியார்கள் பிரார்த்தித்துக் கேட்பதற்காக அவர்களை அவனே அழைக்கிறான். அவனுக்கோ அவர்களில் எத்தேவையும் கிடையாது. அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப்பெற்ற இவ்வரத்தைப் பயன்படுத்தி அவனிடம் அதிகம் பிரார்த்திக்க வேண்டும். அதன் மூலம் உள்ளத்தில் விசாலத்தையும், மன ஆர்தலையும், இறைநம்பிக்கையில் அதிகரிப்பையும் அவதானிக்கலாம். இறைவன் கூறுகின்றான்:

அல்லாஹ்விடம் அவனது அருளை வேண்டுங்கள்! அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவனாக இருக்கிறான். (நிஸாஃ 32).

மேலும் அல்லாஹ் கூறியதாக நபியவர்களைத் தொட்டும் அபூ தர் அல்கிஃபாரீ (ரலி) அவர்கள் அறிவிக்கும் செய்தி முஸ்லிமில் (2577) இடம்பெற்றுள்ளது: நபி (ஸல்) அவர்கள் வளமும் உயர்வும் மிக்க அல்லாஹ் பின்வருமாறு கூறியதாக அறிவித்தார்கள்: என் அடியார்களே! அநீதியிழைப்பதை எனக்கு நானே தடை செய்து கொண்டேன். அதை உங்களிடையேயும் தடை செய்யப்பட்டதாக ஆக்கிவிட்டேன். ஆகவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதியிழைக்காதீர்கள். என் அடியார்களே! உங்களில் யாரை நான் நல்வழியில் செலுத்தினேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் வழி தவறியவர்களே. ஆகவே, என்னிடமே நல்வழியில் செலுத்து மாறு கேளுங்கள். உங்களை நான் நல்வழியில் செலுத்துவேன். என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் உணவளித்துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் பசித்திருப்பவர்களே. ஆகவே,

என்னிடமே உணவாதாரத்தைக் கேளுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கிறேன். என் அடியார்களே! உங்களில் யாருக்கு நான் ஆடையணிவித்துள்ளேனோ அவர்களைத்தவிர மற்ற அனைவரும் நிர்வாணமானவர்களே. ஆகவே, என்னிடமே ஆடை கேளுங்கள். நான் உங்களுக்கு ஆடையணிவிக் கிறேன்.

இதன் அறிவிப்பாளர் வரிசை பின்வருமாறு: ஸஈத் பின் அப்தில் அஸீஸ் – ரபீஆ பின் யஸீத் – அபூ இத்ரீஸ் அல்ஃகவ்லானீ - அபூ தர் அல்கிஃபாரீ (ரலி).

இதன் அறிவிப்பாளர்களில் ஸஈத் பின் அப்தில் அஸீஸ் கூறுகின்றார்: அபூ இத்ரீஸ் அல்ஃகவ்லானீ இதனை அறிவிக்கும் போது முழந்தாளிட்டு அமரு வார்கள்.

நபி (ஸல்) கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) கூறு கின்றார்கள்: நிச்சயமாக அல்லாஹ்விடம் கேட்காத வனுடன் அவன் கோபித்துக் கொள்கின்றான். (திர்மிதீ 3373, இப்னுமாஜாஃ 3827, அஹ்மத் 9701). இச்செய்தி அறிவிப்பாளர் தொடர் அடிப்படையில் பலவீனமானதாக இருந்தாலும், வேறு பல வசனங்களும், நபி மொழிகளும் அதன் கருத்துக்கு சான்று பகர்கின்றன. எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எத்தேவைக்கும் அல்லாஹ்வை அழைத்துப் பிரார்த்திக்காதவனுடன் அவன் கோபிக்கத்தான் போகின்றான். ஏனெனில் அவன் அல்லாஹ்வை இறைவனாக ஏற்கவில்லை. அவ்வாறு ஏற்றிருந்தால் அவனை அழைத்திருப்பான்.

பிரார்த்தனைகளில் கடமையானதும் உண்டு. உதாரணமாக, நேர்வழியை அல்லாஹ்விடம் கேட்பது, அவனிடம் பாவமன்னிப்புத்தேடுவது. அல்லாஹ் கூறு

கின்றான்:

எங்களை நேர் வழியில் செலுத்துவாயாக! (பாத்திஹா 5). அவனிடம் பாவமன்னிப்புத் தேடுவதற்கு உதாரணம் இரு ஸஜ்தாக்களுக்கும் இடையில் பாவமன்னிப்புக் கேட்டுப் பிராத்தித்தல். இதனை ஒரு கவிஞர் பின்வருமாறு கூறுகின்றார்:

இறைவனிடம் கேட்பதை நீ விட்டால் கோபிப்பான்!

மனிதர்களிடம் கேட்கப்படும் போது கோபிப்பார்கள்.

9

# அல்குர்ஆன் ஹதீஸில் எவ்வாறு அல்லாஹ் மாத்திரம் சக்தி பெறும் விடயங்களை வேறு யாரிடமும் பிரார்த்திக்கலாகாது என்பதற்கான பல சான்றுகள் உள்ளனவோ, அதே போன்று துன்ப, துயரங்களின் போது அவனை முன்னோக்கி அவனிடமே கையேந்துவதும் இயற்கை சுபாவத்துடன் ஒத்துப்போகக் கூடியதாகவே இருக்கின்றது

*இந்நிலை காபிர்கள் உட்பட அனைவரிடமும் உள்ளது. இணைவைப்பாளர்களின் நிலையை அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: கடலிலும், தரையிலும் அவனே உங்களைப் பயணம் செய்ய வைக்கிறான். நீங்கள் கப்பலில் இருக்கின்றீர்கள். நல்ல காற்று அவர்களை வழி நடத்துகிறது. அவர்கள் மகிழ்ச்சியடை யும்போது புயல் காற்று அவர்களிடம் வருகிறது. ஒவ்வோர் இடத்திலிருந்தும் அவர்களிடம் அலையும் வருகிறது. தாம் சுற்றி வளைக்கப்பட்டு விட்டதாக அவர்கள் முடிவு செய்கின்றனர். வழிபாட்டை உளத்தூய் மையுடன் அவனுக்கே உரித்தாக்கி ''இதிலிருந்து எங்களை நீ காப்பாற்றினால் நன்றியுள்ளோராக ஆவோம்'' என்று அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்கின்றனர். (யூனுஸ் 22).*

மேலும் கூறுகின்றான்: கடலில் உங்களுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் அவனைத் தவிர யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் மறைந்து விடுகின்றனர். அவன் உங்களைக்காப்பாற்றிக்கரை சேர்த்தவுடன் (அவனைப்) புறக்கணிக்கிறீர்கள்! மனிதன் நன்றி கெட்டவனாகவே இருக்கிறான். (இஸ்ராஃ 67).

அதற்கும் மேல், பிற உயிரினங்கள் கூட தம்மைப் படைத்த இறைவனை நோக்கிச் செல்லும் சுபாவத்திலேயே படைக்கப்பட்டுள்ளன. ஸுலைமான் (அலை) அவர்களின் ஹுத்ஹுத் பறவை பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: (அப்பறவை) சிறிது நேரமே தாமதித்தது. "உமக்குத் தெரியாத ஒன்றைத் தெரிந்து, ஸபா எனும் ஊரிலிருந்து உறுதியான ஒரு செய்தியை உம்மிடம் கொண்டு வந்துள்ளேன்'' என்று கூறியது. "நான் ஒரு பெண்ணைக்கண்டேன். அவள் அவர்களை ஆட்சி செய்கிறாள். அவளுக்கு ஒவ்வொரு பொருளும் கொடுக்கப்பட்டுள்ளது. அவளுக்கு மகத்தான சிம்மாசனமும் உள்ளது''. "அவளும், அவளது சமுதாயமும் அல்லாஹ்வுக்கன்றி சூரியனுக்கு ஸஜ்தா செய்யக்கண்டேன். அவர்களின் செயல்களை ஷைத்தான் அவர்களுக்கு அழகாக்கிக் காட்டி, அவர்களை (நல்) வழியை விட்டும் தடுத்துள்ளான். எனவே அவர்கள் நேர்வழி பெற மாட்டார்கள்'' (என்றும் கூறியது.) (நம்ல் 22 - 24).

அல்லாஹ்வன்றி வேறு படைப்பினங்களை நாடிச் சென்றவர்களை எவ்வாறு இப்பறவை விமர்சித்ததென்று சற்று சிந்தியுங்கள். ஏனெனில் இதுதான் இயற்கை சுபாவம். அதில் தான் அல்லாஹ் பேச முடிந்த, பேச முடியாத மனித ஜின்கள் அனைவரையும் படைத் துள்ளான்.

10

# அல்லாஹ்வன்றி நாம் யாரை அழைக்கிறோமோ அவர்களும் எம்மைப்போன்ற மனிதஇனம் தான் என்பதை மனிதன் அறிந்துதான் வைத்துள்ளான். அவர்களைப்போன்ற அம்மனிதர்களிடம் எவ்வாறு பாதுகாப்புத்தேட முடியும்? ஒதுங்க முடியும்? அவர்களிடம் நோய்நிவாரணி, வாழ்வாதாரத்தைக் கேட்க முடியும்?

*அல்லாஹ் தனது நபியைப்பற்றி “நான் உங்களைப் போன்ற மனிதன்தான். (எனினும்) உங்கள் கடவுள் ஒரே ஒரு கடவுளே என எனக்கு அறிவிக்கப்படுகிறது. தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்லறத்தைச் செய்யட்டும்! தமது இறைவணக்கத்தில் எவரையும் இணைகற்பிக்காது இருக்கட்டும்’’ என்று (முஹம்மதே!) கூறுவீராக! (கஹ்ஃப் 110).*

*மேலும் கூறுகிறான்: “நாங்கள் உங்களைப்போன்ற மனிதர்கள் தாம். ஆயினும் தனது அடியார்களில் தான் நாடியவர் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். அல்லாஹ் வின் அனுமதியின்றி எந்த அற்புதத்தையும் உங்களிடம் எங்களால் கொண்டு வர இயலாது. நம்பிக்கை கொண் டோர் அல்லாஹ்வையே சார்ந்திருக்க வேண்டும்’’ என்று அவர்களின் தூதர்கள் கூறினர். (இப்ராஹீம் 11).*

மேலும் "அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களைப்போன்ற அடிமைகளே. நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் அவர்களை அழைத்துப் பாருங்கள்! அவர்கள் உங்களுக்குப் பதில் தரட்டும்!" (அஃராப் 194) என்ற வசனம் ஏற்கனவே கூறப்பட்டது.

மனித சக்திக்குட்பட்ட விடயங்களில் கூட படைப்பி னங்களிடமே முழுமையாக ஒதுங்கி விடாமல் அல்லாஹ்விடம் தான் கேட்க வேண்டும். எனினும் தனக்கு நோய் வந்ததும் முதலில் தமக்குத்தாமே ஓதிப் பார்க்க வேண்டிய நிலையிலுள்ள மனிதர்களில் சிலர் தமக்கு ஓதிப்பார்க்க இன்னொருவரை நாடிச்செல்வதை அவதானிக்கலாம். அல்லாஹ்வின் அருளால் ஸூரா பாத்திஹா, ஆயத்துல் குர்ஸீ, முஅவ்விதாத் எனப்படும் குர்ஆனின் இறுதி இரண்டு அத்தியாயங்கள் போன்ற வற்றைத்தமக்குத்தாமே ஓதிக்கொள்ளத் தெரியாதவர்கள் யாருமிருக்க மாட்டார்கள்.

ஒருவன் தனக்குத் தானே ஓதிப்பார்க்கும் போது முழு முயற்சியுடன் உள்ளத்தால் இரைஞ்சிக்கேட்பான் என்பது யாரும் அறியாத விடயமல்ல. இது பிரார்த்தனைக்குப் பதில் கிடைக்க மிகவும் வாய்ப்புக்கூடியது. தனக்குத்தானே ஓதிப் பார்த்து, அல்லாஹ் குணமளித்த எத்தனை பேருள்ளனர்? .

மேலும், தொழில் தேடும்பட்சத்தில் முதலில் அல்லாஹ்விடம் ஒதுங்கி இவ்விடயத்தை இலகுபடுத்தித்

தருமாறு வேண்டாமல் உயர்மட்டத்திலுள்ளவர்களுடைய உதவியை நாடிச்சென்று, அவர்கள் மத்திமம் வகிப்பதன் மூலம் தமது தொழிலைப் பெற்றுக்கொள்ள முனையும் சிலரையும் நாம் அவதானிக்கலாம்.

இதாஅதுல் குர்ஆன் வானொலி அலைவரிசையில் நான் கேட்ட ஒரு சம்பவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். ஒருவர் தொழிலொன்றைத்தேடி சம்பந் தப்பட்டவர்களிடம் சென்றுள்ளார். அவர்கள் இவரைப் புறக்கணித்ததும் நெருக்கடிக்குள்ளாகிவிட்டார். எனவே இவ்விடயத்தில் தனக்காகப் பரிந்துரைக்க ஒரு மார்க்க அறிஞரை நாடியுள்ளார். அவ்வறிஞர், அல்லாஹ்விடம் ஒதுங்கி அவனிடம் பிரார்த்திக்குமாரு இவருக்கு அறிவுரை வழங்கியுள்ளார். அதனை ஏற்று அவரும் பஜ்ருக்கு முன்னால் எழுந்து இராத்தொழுகை தொழுது விட்டு பிரார்த்திக்கலானார். பின், தான் ஏற்கனவே தொழில் தேடிச் சென்ற அதே நபர்களை மீண்டும் சென்று சந்தித்தார். அவருக்கு இலகுவாகத் தொழில் கிடைத்து விட்டது. எந்தளவுக்கெனில், நீங்கள் எங்கே சென்றிருந்தீர்? என்று ஏற்கனவே இவரைப்புறக்கணித்த அதே அதிகாரி வினவியுள்ளார்.

மேலும் தனக்கு ஏதாவது தேவையேற்படும் போது பிறரிடம் பிரார்த்திக்குமாறு வேண்டிக்கொள்ளும் சிலரை யும் அவதானிக்கலாம். இறைவனோ அவர்களே பிரார்த் திக்கும் படியும் அவனே பதிலளிப்பதாகவும் கூறுகின்றான்.

*“என்னை அழையுங்கள்! உங்களுக்குப்பதிலளிக்கிறேன்;” என்று உங்கள் இறைவன் கூறுகிறான். (காஃபிர் 60).*

மேலும் கூறுகின்றான்: என்னைப்பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் *“நான் அருகில் இருக்கி றேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும் போது பிரார்த்தனைக்குப் பதிலளிக்கிறேன். எனவே என்னிடமே பிரார்த்தனை செய்யட்டும்! என்னையே நம்பட்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள்” (என்பதைக் கூறுவீராக!) (பகரா 186).*

ஷேஹுல் இஸ்லாம் இப்னு தைய்மியாஃ (ரஹ்) கூறினார்கள்: படைப்பினங்கள் நிறைவேற்றித்தர வேண்டும் என்று அவர்கள் மீது கடமையில்லாத உலக தேவைகளை அவர்களிடம் கேட்பது, கேட்பவர் மீது அடிப்படையில் கடமையோ ஸுன்னத்தோ கிடையாது. மனிதன் ஏவப்பட்டது அல்லாஹ்விடம் கேட்பதற்கும், அவனிடம் ஆதரவு வைப்பதற்கும், பொறுப்புச்சாட்டு வதற்கும்தான். அடிப்படையில் படைப்பினங்களிடம் கேட்பது தடுக்கப்பட்டுள்ளது. நிர்ப்பந்த சூழ்நிலை களுக்காகத்தான் அவர்களால் முடியுமான விடயங்களில் கேட்க அனுமதிக்கப்பட்டுள்ளது. அதையும் விட்டு விட்டு அல்லாஹ்விடமே முழுமையாக பொறுப்புச்சாட்டுவது சிறந்தது.

அல்லாஹ் கூறுகின்றான்: *எனவே ஓய்வெடுத் ததும் வழிபாட்டில் நிலைத்திருப்பீராக! மேலும் உமது*

*இறைவனிடம் ஆசை வைப்பீராக! (இன்ஷிராஹ் 7,8). அதாவது, அல்லாஹ்விடத்தில் மாத்திரம் ஆதரவுவையுங்கள். பிறரிடத்திலல்ல.*

*அல்லாஹ்வைக்கொண்டே அனைத்து அனுகூலங்களும் கிடைக்கின்றன.*

*அரபு ஆக்கம்*

*1427 / 11 / 24*

மொழிபெயர்ப்பு

*1438 / 05 / 22*

IslamHouse.com

IslamHouse-Tamil @IslamHouseTa IslamHouseTa https://islamhouse.com/ta

For more details visit
www.GuideToIslam.com

GUIDE TO ISLAM

contact us :Books@guidetoislam.com

GuidetoIslam.org Guidetoislam1 Guidetoislam www.Guidetoislam.com

المكتب التعاوني للدعوة وتوعية الجاليات بالربوة
هاتف: ٩٦٦١١٤٤٥٤٩٠٠+ فاكس: ٩٦٦١١٤٩٧٠١٢٦+ ص ب: ٢٩٤٦٥ الرياض: ١١٤٥٧
ISLAMIC PROPAGATION OFFICE IN RABWAH
P.O.BOX 29465 RIYADH 11457 TEL: +966 11 4454900 FAX: +966 11 4970126

# ஒரே ஆட்சியாளனிடம் புகலிடம் கோரல் அவசியம் என்பதற்கான சான்றுகள்

இந்நூலானது அஷ்ஷேஹ் அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் அஸ்ஸஃத் அவர்கள் பிரார்த்தனையின் முக்கியத்துவத்தையும், அது படைத்தவனுக்கு மாத்திரம் செய்யப்பட வேண்டுமென்பதையும் தெளிவு படுத்தி எழுதிய ஒரு மடலாகும். நூலாசிரியர் இந்நூலில் அல்லாஹ்விடம் மாத்திரம்தான் பிரார்த்தித்து, ஒதுங்க வேண்டுமென்பதற்கான பத்து அல்குர்ஆன், நபிமொழி, அறிவியல் சான்றுகளை முன்வைத்துள்ளதுடன், மரணித்தவர்களிடம் பிரார்த்திக்கலாம் எனக் கூறுவோர் முன்வைக்கும் ஆதாரங்கள் சிலதையும் கூறி அதற்கும் பதிலளித்துள்ளார்.




IslamHouse.com

Osoul Center
www.osoulcenter.com

Rabwah